Gmail - JDN88
Time : 4:54PM
08/07/2026

3056/2026

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 06**

**ந.க.எண். 34752/எம்-1/இ2/2023, நாள். 08. 07.2026.**

| | | |
|---|---|---|
| பொருள் | : | பள்ளிக் கல்வி – 2026 – 27ஆம் கல்வியாண்டு – முன்னாள் தமிழக முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான 15.07.2026 அன்று அனைத்து பள்ளிகளிலும் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடுதல் – அனைத்து பள்ளிகளிலும் மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி நடத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கி ஊக்குவித்தல் – சார்பு. |
| பார்வை | : | அரசாணை (நிலை) எண். 169 பள்ளிக் கல்வி (எக்ஸ்) துறை நாள்.06.07.2012 |

--------

பார்வை 1இல் கண்டுள்ள அரசாணையில் தமிழ்நாட்டில் கல்லாமை இருளை நீக்கப் பள்ளிகள் பல திறந்து கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுக் கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான ஜூலை திங்கள் 15 ஆம் நாளினை " கல்வி வளர்ச்சி நாள்" என அரசு அறிவித்தும் அந்நாளில் காமராஜர் திருவுருவப்படத்தை அலங்கரித்து ஒவ்வொரு ஆண்டும் கொண்டாட அரசால் அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து இவ்வாண்டு அனைத்து பள்ளிகளிலும் மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி, ஓவியப்போட்டி போன்ற போட்டிகளை நடத்தி வெற்றிப்பெற்ற மாணவ/ மாணவியருக்கு பரிசு வழங்கி ஊக்குவிக்குமாறு அனைத்து பள்ளி தலைமையாசிரியருக்கு அறிவுறுத்திடுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணை இயக்குநர்

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்,

அனைத்து மாவட்டம்.

ந.க.எண் 3056/அ1/2026 நாள் .7.2026

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர் வே.மா

முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் பெறப்பட்டது 8 JUL 2026 வேலூர் - 632009